முதன்மை மாவட்ட நீதிமன்றம், நாகப்பட்டினம்.
முன்னிலை: திரு.டி. கிங்ஸ்லி கிறிஸ்டோபர், எம்.ஏ., எம்.எல்.,
முதன்மை மாவட்ட நீதிபதி.
2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20ம் நாள் செவ்வாய்க்கிழமை
(திருவள்ளுவராண்டு 2053, சுபகிருது வருடம் புரட்டாசி திங்கள் 03ஆம் நாள்)

CNR NO.TNNG010030202020
E.A.No.02/2022 in
E.P.54/2020 in ACP.192/2018

K. கோகிலா ..... மனுதாரர் /2ம்எதிர்மனுதாரர்/ தீர்ப்பாணை கடனாளி

-எதிர்-

ஸ்ரீராம் சிட்டி யூனியன் பைனான்ஸ் லிமிடெட்.,
திருவாரூர் அதற்காக அதன் அதிகாரம் பெற்ற
கையொப்பத்தாரர் .....எதிர்மனுதாரர்/மனுதாரர்/ தீர்ப்பாணை பெற்றவர்

இம்மனு என் முன்பாக 14.09.2022 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்து, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. கே.வி. இராஜேந்திரன் அவர்களும், எதிர்மனுதாரர்தரப்பில் வழக்கறிஞர் திருமதி. கே. கல்பனா அவர்களும் ஆஜராகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பகரும்

<u>உத்தரவு</u>

இம்மனு நிறைவேற்றுமனுவில் கடந்த 22.10.2021 அன்று மனுதாரருக்கு எதிராக பிறப்பித்துள்ள எக்ஸ்பார்ட்டி உத்தரவினை ரத்து செய்து மனுதாரர் தரப்பு கட்சியை கேட்டு முழு விசாரணைக்கு பின் நிறைவேற்று மனுவில் உத்தரவிடக்கோரி அதிகாரம்-21, விதி-106 சிபிசி-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனு சுருக்கம்:

நிறைவேற்று மனுவில் மனுதாரருக்குச் சொந்தமான அசையா சொத்தினை ஜப்தி செய்து ஏலம் போட எதிர்மனுதாரரால் பரிகாரம் கோரப்பட்டுள்ளது. மனுதாரர்தரப்பில் எதிருரை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டு, கடந்த 22.10.2021ம் தேதியில் COVID-19ன் காரணமாக

எதிருரை தாக்கல் செய்யாததினால் எக்ஸ்பார்ட்டி செய்து மனுதாரரது சொத்தினை ஜப்தி செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி விபரம் தற்போதுதான் வழக்கறிஞர் மூலமாக மனுதாரர் அறிந்துள்ளார். எதிர்மனுதாரர் மனுதாரர்தரப்பில் செலுத்தப்பட்டுள்ள தொகைகளை முறையாக வரவு வைக்காமலும், கழிக்காமலும் அதிக தொகை கோரியுள்ளார். எக்ஸ்பார்ட்டி உத்தரவினை ரத்து செய்யாவிடில் ஈடு செய்ய முடியாத இழப்பும், பாதிப்பும் மனுதாரருக்கு ஏற்படும். எக்ஸ்பார்ட்டி உத்தரவினை ரத்து செய்து மனுதாரர்தரப்பு கட்சியை கேட்டு முழு விசாரணைக்கு பின் நிறைவேற்று மனுவில் உத்தரவிடவேண்டும்.

3. எதிருரை சுருக்கம்:

மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு நிலைநிற்கக்கூடியதல்ல. ACP No. 192/2018ல் மனுதாரர்தரப்பில் ஆஜராகி விவரங்கள் எதுவும் எடுத்துரைக்கப்படவில்லை. ஆகவே அங்கு கடந்த 30.12.2019 அன்று இறுதி உத்தரவானது பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன் மீது மேல்முறையீடு காலமும் முடிவடைந்துவிட்டது. மேல்முறையீடு எதுவும் செய்யப்படவுமில்லை. கொரோனா தொற்றின் காரணமாக இம்மனுவில் உரிய காலத்தில் எதிருரை தாக்கல் செய்யமுடியவில்லை என்று கூறுவது சட்டப்படியும் நியாயப்படியும் ஏற்றுக் கொள்ளமுடியாத ஒன்றாகும். நிறைவேற்று மனுவில் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்பு தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவானது தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்றாகும். காலாவதி சட்டத்தால் பாதிப்படைந்துள்ளது. எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

4. இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினையாகும்.

5. தீர்வு:

இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பெற்ற கடன் தொகையினை செலுத்தாததால், இந்த மனுதாரர் (2ம் எதிர்மனுதாரர்) மற்றும் நிறைவேற்று மனுவின் 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக நாகப்பட்டினம் துணைச்சீட்டு பதிவாளர் நீதிமன்றத்தில் ACP 192/2018 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ்வழக்கில் எதிர்மனுதாரர்கள் ஆஜரின்றி 30.12.2019 அன்று எதிர்மனுதாரர்கள்

ரூ.8,26,306/-ம், அசல்தொகை ரூ.8,21,841/-க்கு மனு தாக்கல் செய்த தேதி முதல் தொகை கொடுத்து தீரும் நாள் வரை 18% பின்வட்டி மற்றும் செலவுத்தொகை சேர்த்து 3 மாத காலத்திற்குள் கொடுக்கவேண்டும் என்று துணைச்சீட்டு பதிவாளர் அவர்களால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

6. மேற்படி உத்தரவை அனுசரித்து தொகை எதுவும் அவ்வழக்கின் எதிர்மனுதாரர்களால் செலுத்தப்படாததால், இந்த எதிர்மனுதாரர் நிறுவனத்தால் நிறைவேற்று மனு 54/2020 மனுவில்கண்ட கூடுதல்தொகை ரூ.11,08,169/-ஐ மனுதாரர்/ 2ம் எதிர்மனுதாரரிடமிருந்து அறிவிப்பு அனுப்பி வசூலிக்கவும், அவ்விதம் தொகை செலுத்தாவிட்டால், இம்மனுதாரருக்குச் சொந்தமான அசையா சொத்தினை ஜப்தி செய்ய உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நிறைவேற்று மனுவில் இம்மனுதாரர்/2ம் எதிர்மனுதாரர் வழக்கறிஞர் மூலம் ஆஜராகியபோதிலும், பின்னிட்டு எதிருரைக்காக 08.02.2021 முதல் நிலுவையில் இருந்துவந்து, இறுதி வாய்ப்பு அளிக்கப்பட்டும் எதிருரை தாக்கல் செய்யப்படாததால் இம்மனுதாரர் அழைக்கப்பட்டு, ஆஜரின்றி தோன்றாத்தரப்பினராக்கப்பட்டு, சொத்தினை ஜப்தி செய்ய 22.10.2021 அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

7. மேற்படியாக நிறைவேற்று மனுவில் இம்மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்தரப்பில் கொரோனா தொற்றின் காரணமாக எதிருரை தாக்கல் செய்யமுடியவில்லை என்றும், மனுதாரர்தரப்பில் செலுத்தப்பட்டுள்ள தொகைகளை முறையாக வரவு வைக்காமலும், கழிக்காமலும் அதிக தொகை கோரியுள்ளார் என்றும் வாதம் முன்வைக்கப்பட்டது. மேற்படியாக தொகை வரவு வைக்கப்படவில்லை, கழிக்கப்படவில்லை என்ற விபரங்களை துணைச்சீட்டு பதிவாளர் நீதிமன்றத்தின் முன் ஆஜராகி முன்வைத்து நிரூபிக்க வாய்ப்புள்ளநிலையில், அந்நீதிமன்றத்தில் ஆஜராகாமல் ஒருதலைப்பாளராக இருந்துவிட்டு, அதில் இறுதி உத்தரவு ஏற்பட்டுவிட்ட நிலையில், மேல்முறையீட்டு நீதிமன்றத்தில்தான் அதுகுறித்து அவர் பரிகாரம் தேடிக்கொள்ளமுடியும்.

8. எதிர்மனுதாரர்தரப்பில் ACP 192/2018ல் 30.12.2019 அன்று பிறப்பிக்கப்பட்ட இறுதி உத்தரவின் மீது மேல்முறையீடு செய்யப்படவில்லை என்றும், அவ்வழக்கில் மனுதாரர்

அவரதுதரப்பை எடுத்துரைத்து, வாதிடாமல் தற்பொழுது நிறைவேற்று மனுவில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை நீக்கரவு செய்யகோருவது சட்டத்தின் அடிப்படையில் பிழையுடையது என்று வாதிட்டார். அசல் வழக்கில் ஆஜராகி வாதிடவில்லை என்பதினால் நிறைவேற்று மனுவில் அவருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்யக்கோரி மனு தாக்கல் செய்வதை பிழையுடையதாக கருதமுடியாது. மனுதாரர் நிறைவேற்று மனுவில் அவர் எடுத்துரைக்கவேண்டிய அம்சங்கள் உள்ளதாக கருதி, அவருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்யக்கோரலாம். அவ்வாறு கோருவதற்கு மனுதாரருக்கு உரிமையுள்ள நிலையில், மேற்படியாக எதிர்மனுதாரர்தரப்பில் முன்வைக்கப்படும் வாதம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

9. மேலும் எதிர்மனுதாரர்தரப்பில் நிறைவேற்று மனுவில் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்பு தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவானது காலாவதி சட்டத்தால் பாதிப்படைந்துள்ளது என்று வாதிடப்பட்டது. ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்வதற்கு காலவரம்பு எதுவும் கிடையாது. மனுதாரர்தரப்பில் ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்வதற்கு கூறியுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லாதபோதிலும், ACP 192/2018ல் எதிர்மனுதாரர்கள் ஆஜரின்றி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் இம்மனுதாருக்கு எதிராக நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், அவரதுதரப்பு கட்சியினை எடுத்துரைக்க அவருக்கு ஒரு வாய்ப்பு அளிக்கவேண்டியது அவசியம் என்பதால் இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடுவதே நீதிக்கு உகந்தது என இந்நீதிமன்றம் இப்பிரச்சினைக்கு தீர்வு காண்கிறது.

முடிவில், இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த பொதுவான உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2022ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/- டி. கிங்ஸ்லி கிறிஸ்டோபர்
முதன்மை மாவட்ட நீதிபதி,
நாகப்பட்டினம்.